பொழுது ஆக்கிரமணதாரர்களின் உடமைகளுக்கும் மற்ற சொத்துகளுக்கும் எந்தவிதமான சேதமும் ஏர்படுத்தப்படவில்லை என்றும் காலிசெய்யப்பட்ட குடும்பத்தினருக்குமேற்படி இடத்தின் அருகாமையில் உள்ள புறம்போக்கு நிலங்களில் மாற்று இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். தற்சமயம் எந்தவிதமான பதட்ட சூழ்நிலையும் அங்கு இல்லை.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில்தான் அங்கே ராஜீவ் காந்தி நகர் என்கிற பெயரில் நகர் அமைக்கப்பட்டது. அந்த நகரிலே வீடு கட்டுகிற ஒவ்வொருவரிடமிருந்தும் 500 ரூபாய் லஞ்சமாக பெற்று இருப்பதாக புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் அது குறித்து இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) குடவாசல் மருத்துவமனை பழுதுற்றதாலும் போதுமான மருத்துவர்கள் இன்மையாலும் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனை பழுதடைந்தும், போதுமான மருத்துவர்கள் இல்லாமல் இருப்பதும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

தஞ்சை மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனையில் உள்ள புறநோயாளி பிரிவு தற்போது பொதுப்பணித் துறையினரால் சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. பொது மக்கள் போக்குவரத்துக்கு அச்சமின்றி உள்ளது. கட்டிடத்தின் சில பகுதிகளில் ஓடு வேய்ந்த கூரைகளில், தண்ணீர், மழைக்காலத்தில் ஒழுகிக் கொண்டு வரும் நிலை உள்ளது எனத் தெரியவருகிறது. பொதுப்பணித்துறையின் மூலம் இப்பணியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்கு அங்கீகரிக்கப்பட்ட உதவி அறுவை மருத்துவர்கள் இருவர் உள்ளனர். இவர்களில் ஆண் மருத்துவர் ஒருவரும், பெண் மருத்துவர் ஒருவரும் பணி புரிந்து வருகிறார்கள்.

1989 ஏப்ரல் 24]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் பகுதியிலுள்ள மக்களிடையே பதட்டமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து மிகச் சுருக்கமாக, அதுவும் 8 வரிகளில் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது. போதுமான விவரமுள்ள அறிக்கையாக அது அமையவில்லை. தனிப்பட்ட முறையில் நான் குடவாசல் மருத்துவமனையை 18—3—1989 அன்று பார்வையிட்டேன். அங்கே ஒரு பெண் மருத்துவர் மட்டும் அன்றைக்கு பணியில் இருந்தார். அந்த மருத்துவமனை கடந்த 10 ஆண்டு களாக எந்தவிதமான பராமரிப்பும் இல்லாமல் கட்டிடங்கள் பல பகுதிகளில் பழுதடைந்திருக்கின்றன. உள்ளே செல்ல முடியாத சூழ்நிலை இக்கிறது. பல கட்டிடங்களில் அப்படிப் பட்ட நிலை இருக்கிறது. இந்த விவர அறிக்கையில்கூட சில பகுதிகளில் மழை பெய்தால் ஒழுகிக் கொண்டிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள படுக்கைகளில் உயிர் உள்ள மனிதர்கள் யாரும் படுக்க மாட்டார்கள். அவ்வளவு மோசமான படுக்கைகளாக இருக்கின்றன. எங்கும் ஒரே காடுகளாக காட்சியளிக்கிறது. கால் வைத்து அங்கே நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதுபற்றி அங்குள்ள டாக்டர்களை அணுகிக் கேட்ட போது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் போன்ற விவரம் தெரிந்தவர்கள் விளக்க உரை ஆற்ற வேண்டாம். வினாவாகக் கேட்டால் மட்டும் அனுமதிப்பேன், அப்படி இல்லையென்றால் அடுத்த உறுப்பினரை அழைப்பேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள டாக்டர்களை நான் அணுகி கேட்டபோது அந்த மருத்துவ மனைக்குள் பாம்பு வந்ததாக தெரிவித்தார்கள். அங்கே மின்சார வசதியில்லை. குடி தண்ணீர் வசதியில்லை. அங்குள்ள இன்னொரு பிரச்சினை, நீர் தேக்க தொட்டிக்கு தண்ணீர் ஏற்றுகின்ற மோட்டார் பழு தடைந்ததால் பல ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துச் சென்றார்கள். ஆனால் அதை பழுதுபார்த்து இதுவரை அங்கே கொண்டு வந்து வைக்கவில்லை. அதை அங்கே மீண்டும் கொண்டு வந்து வைக்க ஏற்பாடு செய்வதுடன் மின்சார வசதியையும் ஏற் படுத்தி கொடுக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது வாகவே தமிழகம் முழுவதிலிருந்தும் இது போன்ற பல்வேறு புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே இது குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர் களோடு கலந்து பேசி, உடனடியாக மருத்துவ மனைகளிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவரிடம் கேட்டுக் கொண்டு அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்

பட்டிருக்கின்றன. தமிழகம் முழுவதுமுள்ள மருத்துவ மனைகளிலே இப்போது இதுபோன்ற புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் ஒரு பகுதியாகத்தான் குடவாசலிலேயும் இதுபோன்று முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்டிய குறைபாடுகளுக்குமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்றேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை கொடவாசல் வட்டத்தின் தலைநகரில் அமைந்திருப்பதால் இதை, வட்ட மருத்துவமனையாக மாற்றி, அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க அதாவது காம்பவுண்டு சுவர் கட்டிக் கொடுப்பது, தேவையான படுக்கைகளைக்கொண்ட புதிய வார்டுகளைக் கட்டிக் கொடுப்பது, அவசரச் சிகிச்சை பிரிவு அமைத்து கொடுப்பது, எக்ஸ்-ரே எடுக்கும் பிரிவு, ரத்தம்-மலம் போன்றவற்றைச் சோதனை செய்யும் பிரிவு ஆகியவற்றை அமைத்துக் கொடுப்பது, கழிப்பிட வசதியைச் செய்து கொடுப்பது போன்றவற்றை, கருணை உள்ளத்தோடு செய்து தந்திட இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

7. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித் தொழிலும்,

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி.

கோரிக்கை எண். 26.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,71,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS